முருகப்பெருமான் துணை

**மகான் அருள்நந்தி சிவாச்சாரியார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.05.2023, வியாழக்கிழமை

1. தவபலமிக்க அரங்க மகானே
   தரணி காத்திடும் தருமனே
   அவதாரம் கலியினில் புரிந்து
   அறியாமை அகற்ற வந்த தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
   தெரிவிப்பேன் சோபகிருது தகர் திங்கள்
   ஆசிபட மூவேழு திகதி குருவாரம்
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 21ம் நாள், 04.05.2023, வியாழக்கிழமை)
   அருளுவேன் அருள்நந்திசிவாச்சாரியார் யானும்
3. யானும் அறிவுரை ஆசிதனை
   உலகோர் தெளிவுபெற வேண்டி
   ஞானமாக நல்சக்தியாக உரைப்பேன்
   நம்பிக்கை வைத்து அரங்கன்வழி
4. அரங்கன்வழி மக்கள் வர
   ஆத்ம ஞான சுத்திகள்
   வரங்களாக பக்தி என்கின்ற
   வழிபாட்டின் வழியேகிட்டி
5. கிட்டிபின் சரணாகதி பெருக
   குறைவிலா புண்ணிய வழியாம்
   தட்டாது அரங்கன் தரும
   தனிப் பெரும் அன்னதான சேவை
6. சேவை கலந்து இனிதே
   சிறப்பான தருமம் செய்து
   அவசியம் இயன்ற பொருளுதவி
   அதற்கும் மேலான உடல் உழைப்பு
7. உழைப்பென தொண்டு செய்து
   உண்மைபட குருவே யாவுமென
   பிழையற சரணடைவு காண
   பிறப்பின் பயனை அடையும் வண்ணம்

8. வேண்டியே உடல் தூய்மைக்காண
வினவிட உணவு முறை சரிசெய்து
கொண்டுரைக்க மனம் தூய்மைபெற
குருமார்கள் ஞான நூல்களை

9. நூல்களை கற்றுவர வேணும்
நாட்டிட செயல் வடிவம் பெற
நல்விதமாய் அரங்கன் தரும
நற்காரியச் சேவைதனில் கலந்து

10. கலந்துமே தொண்டாற்றியே
கட்டாயம் தருமத்தில் உதவி
பலந்தரும் குருமருந்தாம் இனிதே
பாடிடுவேன் சிவசக்தி மூலிகை

11. மூலிகை காலை உண்டுவர
முருகப் பெருமானை வணங்கிவர
காலனை வென்று இனிபிறவா
கல்ப ஞான தேகமாக்கி நிலைப்பர்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—